# CA MRSA நிலையில் நோயாளிகளுக்கான பரிந்துரைகள்

கன்டோனல் சுகாதார அலுவலகம் ஜூன் 2023

## 1. முக்கியமான உண்மைகள்

**சமூகத்துடன் தொடர்புடைய மெதிசிலின்-எதிர்ப்பு ஸ்டேஃபிலோகோகஸ் ஆரியஸ்** (CA-MRSA) என்பது ஒரு **பாக்டீரியம்** இது வழக்கமாக சருமத்தில் (காலனிசேஷன்) காணப்படுகிறது. இது சில சமயங்களில் சரும தொற்று அல்லது காயத்தை ஏற்படுத்தலாம், மேலும் அரிதான சந்தர்ப்பங்களில் நிமோனியா அல்லது செப்டிசீமியா போன்ற தீவிரமான நோய்த்தொற்றுகளை ஏற்படுத்தலாம்.

CA-MRSA பல வகையான நுண்ணுயிர்க்கொல்லிகளுக்கு (ஆண்டிபயாடிக்களுக்கு) எதிர்ப்பாற்றலுடன் இருக்கிறது, அதாவது வழக்கமான நுண்ணுயிர்க்கொல்லிகளால் (ஆண்டிபயாடிக்களால்) கொல்லப்படுவதில்லை. CA-MRSA என்பது **வலியத்தாக்கும் தன்மையானது மற்றும் குறிப்பாக நல்ல ஆரோக்கியமானவர்களைப் பாதிக்கிறது**. எனவே, மக்கள் முதன்மையாக மருத்துவமனை அமைப்பிற்கு வெளியே, *சமூகத்தில்* (CA-MRSA) பாதிக்கப்படுகிறார்கள்.

## 2. பயனுள்ள நுண்ணுயிர்க்கொல்லி (ஆண்டிபயாடிக்) சிகிச்சை

*CA-MRSA ஆல் பாதிக்கப்பட்டால், சிறப்பாக இந்த எதிர்ப்பு பாக்டீரியத்தை நோக்கமாகக் கொண்ட நுண்ணுயிர்க்கொல்லிகளை (ஆண்டிபயாடிக்குகளை) நீங்கள் எடுக்க வேண்டியிருக்கும். இந்த சிகிச்சை மருத்துவரால் பரிந்துரைக்கப்படும்.*

- **வாய்வழி நுண்ணுயிர்க்கொல்லிகள் (ஆண்டிபயாடிக்கள்)**
  - மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட அளவுகளின் எண்ணிக்கையுடன் சரியாக இணங்கவும்.
- ***சரும நோய்த்தொற்றுக்கான குறிப்பிட்ட சிகிச்சையின் போது (காயம், கொப்புளம், போன்றவற்றில்)***
  - பரிந்துரைக்கப்பட்ட அளவுகள் மற்றும் பயன்பாட்டு முறைகளுடன் இணங்கவும்
  - உங்கள் கைகளைக் கழுவாமல் தொற்று ஏற்பட்ட இடத்தை தொட வேண்டாம்
  - காயம், கொப்புளம் போன்றவற்றைத் தொட்ட பிறகு உங்கள் கைகளைக் கிருமி நீக்கம் செய்யவும்.
  - ஒருபோதும் தொற்று ஏற்பட்ட இடத்தை துளைக்கவோ அல்லது கீறவோ கூடாது; உங்களுக்கு நிலைமை மோசமாகும் ஆபத்து ஏற்படலாம்
  - தேவைப்பட்டால், 70% ஆல்கஹால் அல்லது மற்றொரு ஆண்டிசெப்டிக் மூலம் காயத்தை கிருமி நீக்கம் செய்யவும்
  - டிரஸ்ஸிங் ஒட்டாமல் அல்லது ஈரமாக இருந்தால், அதை உடனடியாக மாற்றவும்.

மருத்துவரிடம் செல்லும் வருகைக்கு இடையில் நீங்கள் காயத்தைத் தொட வேண்டாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

## 3. சருமத்தின் கிருமி நீக்கம்

*இதுவே **"காலனித்துவ நீக்கம்"** என்று குறிப்பிடப்படுகிறது. **இதன் நோக்கம் என்னவென்றால் நோய்த்தொற்று குணமடைந்த பிறகும், சருமத்தில் அல்லது மூக்கில் மீதமுள்ள பாக்டீரியாவை நீக்குவதே.** இந்த காலனித்துவ நீக்கம் மருத்துவரால் பரிந்துரைக்கப்படும்.*

- குறைந்தது 10 நாட்களுக்கு, ஒவ்வொரு நாளும் கிருமிநாசினி சோப்புடன் (உதாரணமாக ஹைபிஸ்க்ரப்® அல்லது பெட்டாடின்®) குளிக்கவும்.
- அக்குள் மற்றும் இடுப்பு பகுதியில் கவனம் செலுத்தி, முழு உடலிலும் முடியிலும் சோப்பைப் பயன்படுத்தவும் .
- அதே 10 நாட்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு முறை ஒவ்வொரு நாசியின் உள்ளேயும் பாக்ட்ரோபன்® என்ற நாசி ஆண்டிபயாடிக் ஆயின்மென்ட்டைத் தடவவும்.

## 4. சுகாதார நடவடிக்கைகள்

*இந்த சுகாதார நடவடிக்கைகள் CA-MRSA-இன் சிகிச்சை மற்றும் காலனித்துவ நீக்கத்தை நிறைவு செய்கின்றன. **CA-MRSA மூலம் மீண்டும் காலனித்துவம் அல்லது தொற்றுநோயைத் தவிர்க்க** அவை உதவுகின்றன.*

- ஒருவரின் கைகளை கிருமிநாசினி கரைசல் (ஸ்டெரிலியம்®, ஹோபிரூப்®, சாஃப்ட்-மேன்® அல்லது அவிட்ராசிட்®, உதாரணமாக) மூலம் கிருமி நீக்கம் செய்வது மிக முக்கியமான சுகாதார நடவடிக்கையாகும். ஒருவர் சாப்பிடுவதற்கு முன்பும், கழிப்பறைக்குச் சென்ற பின்பும், மேலும் நிச்சயமாக காயத்தைத் தொட்ட பிறகும் கைகளைக் கிருமி நீக்கம் செய்ய வேண்டும்.
- துண்டுகள், முகத்திற்கான துணிகள், படுக்கை விரிப்புகள் மற்றும் ஆடைகளை முடிந்தவரை அடிக்கடி மாற்ற வேண்டும். ஒருபோதும் குடும்பத்தின்ரகளிடையே கூட, அவற்றைப் பகிரவோ அல்லது பரிமாறிக்கொள்ளவோ கூடாது.
- குடும்பத்தினர் ஒவ்வொருவரிடமும் அவர்களுக்கு சொந்தமான நாசி ஆண்டிபயாடிக் ஆயின்மென்ட் டியூப் மற்றும் அவர்களுக்கு சொந்தமான சுகாதார பொருட்கள் இருக்க வேண்டும்.
- நகங்களைக் குட்டையாக வைக்க வேண்டும்.
- வீட்டை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். குளியலறை மற்றும் கழிப்பறைகளைச் சுத்தம் செய்ய ஒரு கிருமிநாசினி தயாரிப்பு (ப்ளீச்) பயன்படுத்த வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.
- காயங்கள் உலர்ந்த மற்றும் சுத்தமான துணியால் மூடப்பட்டிருந்தால் குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர் பள்ளிக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.
- தொழில்முறை நடவடிக்கைகளில் ஈடுபடும் பெரியவர்கள் தொடர்ந்து பணிப்புரியலாம். எனினும், காயங்கள் உலர்ந்த மற்றும் சுத்தமான துணியால் மூடப்பட்டிருக்க வேண்டும்.
- டிரஸ்ஸிங் செய்ய பொறுப்பான குடும்பத்தினர் நீக்கக்கூடிய கையுறைகளை அணிய வேண்டும் மற்றும் ஒருமுறை முடித்தவுடன் கிருமிநாசினி கரைசல் (ஸ்டெரிலியம்®, ஹோபிரூப்®) மூலம் அவர்களின் கைகளைக் கிருமி நீக்கம் செய்ய வேண்டும்.

## 5. உங்களுக்கு நெருக்கமானவர்களின் பின்தொடர்தல் சோதனை

***உங்களுக்கு நெருக்கமானவர்களுக்கான CA-MRSA சோதனை மற்றும்/ அல்லது காலனித்துவ நீக்கம்**( பொதுவாக உங்கள் குடும்பம், ஆனால் சில சூழ்நிலைகளில், மற்றவர்களும்) **ஒரே குடும்பத்தில் புதிய காலனித்துவங்கள் அல்லது தொற்றுநோய்களைத் தவிர்க்க உதவுகிறது.** இது மருத்துவரால் பரிந்துரைக்கப்படும்.*

- உங்கள் குடும்பத்தினர் மற்றும் உங்களுக்கு நெருக்கமானவர்களுக்கு இடையே மூக்கு மற்றும் இடுப்பு மடிப்புகளில் CA-MRSA பரிசோதனை மேற்கொள்ளப்படலாம்.
- உகந்த காலனித்துவ நீக்கத்திற்கு முழு குடும்பத்திற்கும் ஒரு சரும கிருமி நீக்கம் சிகிச்சை பெரும்பாலும் அவசியம்மானது மற்றும் முழு குடும்பத்திற்கும் ஒரே நேரத்தில் செய்ய வேண்டும்.

- சிகிச்சை முடிந்து ஒரு மாதத்திற்குப் பிறகு, உங்கள் குடும்பப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அல்லது உறவினர்களின் சருமத்தில் அல்லது மூக்கில் CA-MRSA இல்லை என்பதைச் சரிபார்க்க சோதனை முன்மொழியப்படலாம்.

REPUBLIQUE ET CANTON DE GENEVE
Département de la santé et des mobilités
**Direction générale de la santé**

- வலைத்தளம்: www.ge.ch/recommandations-aux-patients-cas-c-mrsa